"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED

பூலோக வியாஸன்.

மாதாந்தரப் பிரசுரம்.

தொகுதி 6.] சென்னை, 1909௵ மேமீ [பகுதி 5.

போலீஸ்காரரும் அவர்கள் செயலும்.

காவற்காரர் என்னும் பொருளைத்தரும் போலீசாரைப்பற்றி சிலதெழுதுவாம். நமது காருண்யம் பொருந்திய ஆங்கில அரசாட்சியில் யாம் அடைந்துள்ள நாகரீகம் சுகாதார விஷயங்கள் பற்பலப் பட்டதா யிருந்தாலும், தூரதேயத்து சேதிகளை அப்போதைக்கப்போதும், நீண்டநாள் நெடும்பிரயாணத்தை அதிதுரிதத்தில் செய்வதற்கும்இன்றியமையாத காரண துரந்தரராயிருப்பவர்கள் நமது ஆங்கிலேய அரசாட்சியாரே யாம். இவை போன்றும் இன்னும் பலவகையான உபகாரங்கள் போன்றும் இவ்வரசாங்கத்தில் ஆட்பட்ட குடியாகிய நம்மவர்களும் செய்துவரும்

சகலவித நன்மைகளுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடப்பாடுடையவர்களேயாம். அது போன்றே, பிரஜைகளுக்கு அடிதடி கொலை காயம் முதலிய சரீர அபாயமும், திருட்டு முதலிய கைப்பொருள் சேதமும் உண்டாகாமலும் தீயச்செயல்கள் நடவாமலும், பாதுகாப்பதே இப்போலீசாருடைய செய்கையாம். முற்காலத்தில் காவல் ஏற்பாடு நல்ல நியாயத்தை அநுசரித்திருந்தது அதாவது இந்த இந்த கிராமங்களுக்கு இந்நின்னர் இந்த இந்த ஸ்தலங்களுக்கு இவரிவர்கள் என்று ஏற்படுத்தி அவர்களையே பொருப்பாளிகளாக அங்கங்கே பிரிக்கப்பட்டிருந்தது. அதனால் அநுகூலமுண்டாயிருந்தாலும் நாளுக்குநாள் சீர்கெட்டு எளியார்க்கு மிக்க இடுக்கணுண்டாக்கும் வகைக்கு வந்தது. ஓரிடத்துக்குப் பொருப்பாளியாக நியமிக்கப்பட்டவர்கள் தங்களுக்குச்சர்வ சுயாதீனமும் உண்டாய் விட்டதாக எண்ணி ஏழைகளை வஞ்சித்தும் ஸ்திரிகளை நாசப்படுத்தியும் திருட்டுக்குடன்பாடுற்று மிருந்தார்கள், என்று பலர் சொல்லவும் சரித்திர ஆராய்ச்சியுடன் சமாசார பத்திரிகை வாயிலாகவும் அறிந்திருக்கிறவர் பலர். ஆயினும் குடியோம்பிக்காக்கும் நமது அரசாட்சியார் நாளுக்கு நாள் அவர்களைக்கண்டு பிடித்து பட்சபாதக மின்றி தண்டித்து விட்டார்கள்.

அவ்வாறு அவர்கள் செய்ததின் காரணமென்ன வென்றால் இக்காவல்காரரின் விசாரணை நேராகவே நியாயாதிபதியின் கீழ் இருந்தது. நியாயாதிபதி நியாய விசாரணை செய்வதுடன் தீர்வை விஷயம் மற்றும் விஷயங்களில் தலையிடவேண்டியதாயிருந்ததால் இப்போலீசு காவல்வேலை அவ்வளவு சீராக நடக்க ஏதுவில்லாமல் போய்விட்டது. இப்போதோ வெனில் இதரமான வேலையையுடைய அதிகாரிகளுக்குச் சம்பந்தமில்லாமல் பிரத்தியேகமாக போலீசு டிபார்ட்மெண்ட் என்று ஏற்படுத்திய பிறகு சற்று சீராகவும் ஒழுங்காகவும் நடைபெற்று வருகின்றது. இந்தப் போலீசு ஏற்பாடு அநுஷ்டானத்துக்கு வந்து ஏறக்குறைய 45—வருடங்களாகிறது. இப்போலீசாருடைய சேனைமுழுமையும் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடைய விசாரணைக்குட் பட்டது. சென்னை ராஜதானி முதலிய பிரிவுகளில் ஓர்போலீசு கமிஷனரும் அவருக்குதவியாக இருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

REGISTERED

வெளிநாடுகளில் பலபிரிவுகளுண்டாக்கி ஒவ்வொரு டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலை நிர்மானித் திருக்கிறார்கள். ஜில்லாக்களுக்குத் தக்கபடி சூப்பரின்டென் டென்டுகளையும், அவர்களுக்கு உதவி யுத்தியோகஸ்தர்களையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவர்களுக்குக்கீழாக இன்ஸ்பெக்டர்களும் சப் இன்ஸ்பெக்டர்களும் நியமனப்படுத்தி யிருப்பதுடன் ஆங்கிலேய கான்ஸ்டேபில் களையும், சென்னைநாட்டி லேற்படுத்தி யிருக்கிறார்கள். இக்கான்ஸ்டேபில்களில் தாரதம்மியமாக ஏற்பாடுண்டு, தற்காலமோ முன்னைவிட அவரவர்கள் வரிசைக்கிரமத்திற்குத் தக்கபடி போதுமான சம்பளங்களும் கொடுத்து வருகிறார்கள். இதனுடன் அவர்களிருக்க வசதிகளும் ஏற்படுத்தி தந்திருக்கிறார்கள்.

இவைகளுடன் போர்வீரர்களைப்போல் யூனிபாரம் உடுப்புகளும் கொடுத்து டிரில்முதலானதும் செய்யப்பழக்கி வைத்து வருகிறார்கள் இவர்கள் போர்முகத்துதவாத வர்களாயினும் சமயாநுகூலம் நோக்கி சிறு உதவியாவது குடிகளுக்குப் புரிவான் வேண்டியே இவ்வாறு செய்திருக்கிறார்கள். இன்னும் பலவிதமான சௌகரியங்க ளேற்படுத்தி யிருப்பதோடு பஞ்சகால உபகாரமும் செய்கிறார்கள். இப்போலீசு வகைராக்களில் எத்தனையோ நல்லவர்க ளிருக்கிறார்கள் அவர்கள் லஞ்சமென்பதை கிஞ்சிற்றும் வாங்குகிறதே யில்லை. ஊக்கமாகவும் ஊர்பந்தோபஸ்தாகவும் பாடுபட்டு நடக்கிறார்கள். ஆனால், சிலரோ லஞ்சத்திற்கு நெஞ்சம் துடித்து கொஞ்சமும் தஞ்சமின்றிவஞ்சனைக்குள்ளா யிருக்கிறார்கள். சிலநாளைக்குமுன் இச்சென்னையில் மாஜிஸ்திரேய்ட் வேலைபார்த்து வந்த கனம் பொருந்திய அஜீஸ் உடின் சாயப் நியாயாதிபதி யவர்கள் காலத்தில் லஞ்சம்பெற்ற அநேக போலீசு கான்ஸ்டேபில்கள் தண்டிக்கப்பட்டதினால் இச்சென்னையில் லஞ்சம் வாங்கும் பழக்கம் கொஞ்சம எஞ்சியது. ஆயினும் ஏழைகளை வஞ்சித்து வாங்கும் லஞ்சதாரிகள் இன்னுமிருந்து கொண்டே யிருக்கலாம் என்பதற்கையமில்லை.

எவ்வாறெனில் சிலநாள் முன்னர் வண்டிக்காரரிடம் லஞ்சம் வாங்கி நமது இன்ஸ்பெக்டர் முதன்மையிலே பிடிக்கப்பட்டும் ஓர் வியாச்சியம் தண்டனையா யிருக்கிறது. இதனால் எல்லாப்

போலீசு உத்தியோகஸ்தர்களும் இப்படிச் செய்கிறார்களென்றல்ல. இவர்களில் தீச்செயல்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டுமானால் காவலுக்குக்காவல் செய்வதுபோல் ஏற்பாடுசெய்யவேண்டும். ஓர் சமயம் அதுவு மிதுவு மொன்றாகி அனர்த்தஞ் செய்தாலும் செய்யும் எது எப்படி செய்தாலும், அவரவர்கள் நிலையைக் கைப்பிடித்து நடப்பதே உத்தமமாகும் சிலரோவெனில் போலீசு உத்தியோகம் வந்தவுடன் தங்களுக்கு ஓர் சிற்றரசாளவந்த கௌரதையாக நினைத்துக் கொண்டு அன்றே துடிப்பு கர்வம், பெருமை, வஞ்சனை செய்தல், சதிசெய்தல், அங்காடி கூடையை அதிரவடித்தல் முதலிய தீக்குணங்களே ஓர் உருவமென நடித்துக்காட்டி கடைசியில் காடிப்பானை பல்லியாய்விடுகிறார்கள். இந்த விஷயத்தில் நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் மேலான உத்தியோகஸ்தர்களுஞ் சற்று கவனிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். எவ்வாறெனில், ஆங்கிலேய அரசாட்சியிலுங்கூட இச்சொற்ப உத்தியோகத்திற்கு ஜாதிபேத மதபேத மேற்படுத்தியிருக்கிறது அவ்வளவு சிரேஷ்டமாகக் காணப்படவில்லை. அதுவே அவர்களுக்குத் தீங்கின் முதற்காரண அதுவமாகிய பொய்யின் அஸ்திவாரமாக நிற்கின்றது. எப்படியெனில் உலகத்தின் எல்லாப்பக்கங்களைவிடச் சிறுபாக மாகிய, இவ்விந்தியாவில் அதனிலும் தென்னாட்டில் மாத்திரம் ஜாதிசாதியென்ற பெருங்கட்டு தொலையாதிருந்தாலும் நமதுகாருண்ய அரசாட்சியாலும், நாகரீக நடவடிக்கைகளாலும், சற்றேறக்குறைய நாளடைவில் நீங்கிவந்து சிறுபாகமாகத் தலைக்காட்டி இப்போலீசு உத்தியோகத்திலும் புகுந்துகொண்டிருக்கிறது. அதாவது இந்தியாவில் மேலானஜாதியாகவும் கொல்லாவிரதமுதலானவைகளைக் கைக்கொண்டவர்களாகவு மிருந்த ஆதியாரை நயவஞ்சகத்தால் தாழ்த்தி பறையர் பறையர் என்று அவமானமேற்கச் செய்துவந்தார்கள்.

அவ்வாறு நடத்தியபோது கல்வி ஜலம் நாகரீகம் முதலியவைகளுக்குள்ளவர்களை ஏறவிடாமல் நசுக்கிவந்தார்கள். அதனால் உயர்ந்த அந்தஸ்துடைத்தா யிருந்த அவர்களுக்குப் பலவகையான அசௌகரியங்களுண்டாகி நாகரீகமற்றுப்போனார்கள். இவ்வாறு இக்குலத்தார் தாழ்ந்த நிலைமைக்கு வந்ததற்குக் காரணம் பெர்சியா தேசத்திலிருந்து வந்து குடியேறிய ஆரியர்களே. இவர்கள் செயலால் இப்போதுங்கூட இப்போலீசு அரசுரிமையில் பறையரென்பாரை வைக்கப்படாது என்று ஓர் தீர்மான மிருப்பதாகத் தெரிந்து பயந்து தங்களைப் பொய்ச்சொல்லி மறைத்து அநேகர் அந்தவேலைகளில் புகுந்துழைத்துழல்கிறார்கள். முதற்

கோணல் முற்றுங் கோணல் என்பதுபோல் பறையரென்னும் நன்னாகரீக உண்மை யபிமானிகளுக்கு அவ்வேலையைக் கொடுக்கப்படாது என்பது நோக்கிருலையிலிருக்கும் சிலர் ஏதும விவகாரமின்றித் தங்களைக் கிறிஸ்தவர்களென்று பொய்க்கூறி அந்த வேலையில் நுழைந்துக்கொள்ளுகிறார்கள். ஐயோ இவர்கள் பேர்மாத்திரம் கிறிஸ்தவர்கள் கோவில் கலியாணம் மற்றும் கும்பாதாரமான பேர்கள் விவகாரங்கள் யாவும் விபரீதமாகவேயிருக்கிறது. இத்தகைய மத துரோகிகளாகவே முன்னெழுந்து இப்போலீசு வேலையைத் தழுவியதும் தங்கள் பூர்வநிலைமை மறந்துவிடுகிறார்கள். நமது போலீஸ் மேலதிகாரிகள் இவர்களை மதவார்த்தையினால் சம்மதங்கொண்டு வைப்பதைப்பார்க்கிலும நற்குலத்தவராய் நல்ல ஒழுக்குள்ளவர்களாய் சத்தியவந்தரானவர்களைத் தெரிந்தெடுத்து உண்மை அரசாங்கத்தின் நற்செய்கையாகிய காருண்யத்தைக் குடிகள்பால் காட்டுவார்களாக. குடிகளுக்கு சுகசௌகரியங்களைத்தியாவசியமே யன்றி மத கோட்பாட்டின்வழி சௌகரியத்திற்கேற்றதல்லவென்பாம் இக்காலத்திலும் போலீசாரில் துன்மார்க்கர் அநேகருண்டு அவர்கள் காலடைவில் கருணைக்கடலாகிய பகவான் கிருபையால் தண்டிக்கப்படுவார்கள் இத்தகைக்குச்சாட்சி முத்து கிருஷ்ணநாய்க்கர் முதலானவர்களேயாம் ஆனால் கடந்தார்போக தற்காலம் போலீசு இலாக்காவில் நல்லன்பர்க ளனேகருண்டு அவருள் பெரிய உத்தியோஸ்தர்கள் ஆங்கிலேயர் தவிர பெரிய இன்ஸ்பெக்டர்களாக தற்காலம் இருப்பவர்களில் மதுரைஜில்லாவிலிருந்து காலஞ்சென்ற முருகேசம்பிள்ளை யவர்கள் செயலும் தற்காலம் சென்னையின்கண் இருநிதிச் செல்வராயும் தத்விஷயங்களுக் கிட்டட்டவராயும், தமிழபிமானியாயும், தமிழ்ப்புலவர்பா லன்புகொழுமியவராயும், சற்குணமே ஒருருவங்கொண்டவராயு மிருக்கும் ஸ்ரீமான் S. பவானந்தம்பிள்ளை யவர்கள் ஸ்ரீமான் தருமலிங்க முதலியாரவர்கள் போன்றும் வேறுசிற்சில உண்மையான எட்கான்ஸ்டேபில்களைப் போன்றும் பரோபகாரமாகவும், குடிகளுக்கு உபகாரார்த்தமாகவும் நடக்கிறதாக நன்கு புலப்படாநிருக்காது அவ்வண்ணமே மற்ற போலீசு உத்தியோகஸ்தர்கள் செய்வார்களானால்பெரும் பிரயோஜனத்தை யுண்டாக்கும். நமது ஆங்கில அரசாட்சியானது நீடூழி நிலைத்து நிற்குமாக.

ராஸிலஸ்.

93ம் பக்கத்தொடர்ச்சி

இன்பத்திற்குஇருப்பிடமாகியபள்ளத்தாக்குவாசிகளுடைய சுகத்திற்கும் ஆனந்தத்திற்கும் ஏற்கும் எத்தனம் செய்ப அங்கு

அடைந்த வித்தகர் வகுப்பில் பல யந்திரங்களை நன்குணர்ந்த ஒருவன் இருந்தான். அவன் வியவகாரத்திற்கும் விநோதத்திற்கும உதவும் யந்திரங்கள் பல யூகித்து நிர்மாணித்தான். நீரிற் சுழலும் சக்கரம் ஒன்று நீரை எழுப்பி ஒரு கோபுரத்திற் செலுத்தும். அங்கிருந்து அந்தத் தெண்ணீர் அரண்மனை அறைகள் அனைத்திற்கும் வெவ்வேறு மார்க்கமாய்ப் போய்ச்சேரும். அன்றியும் அந்த யாந்திரிகன் உத்தியானத்தில் அடித்த கூடாரம் ஒன்றிலிருந்து சமீபத்தில் நாற்றிசையும் மழை வருஷிப்பதுபோல நீர் இறைத்து இளங்குளிர்க்காற்று உலாவும்படி யந்திர உபாயம் ஏற்படுத்தியிருந்தான். பிரத்தியேகமாய்ப் பெருமாட்டிகள் உலாவும் பூங்கா ஒன்றில் ஆற்றுக்கால் நீர் ஓடும் வேகத்தால் ஆலவட்டங்கள் தடையறச் சாமரை இரட்டுவதுபோல் அசையகா எங்கும் ஆரோக்கியமான இளங்காற்று உலாவும். தூரம் அளந்து ஒன்றுக்கொன்று ஏற்கும் இடத்தில்வைத்திருக்கும்யாழ் முதலிய கீதக்கருவிகள் சில காற்றுத் தாக்கியும், சில நீர் தாக்கியும் சேஷ்டிக்க, செவிக்கு இனிய மிர்துவான நாதம் பிரக்கும்.

சிறை நீங்கி உலகப்பரப்பிற் செல்ல இடப்பெறும் பொழுது கற்றறிந்தனவெல்லாம் சமயத்திற்கு உதவுமென்று எண்ணினான கல்வித்துறைகளையும் பரிந்து வருந்திக்கற்ற ராஸிலஸ் மேற்சொல்லிய வித்தகனைச் சில தருணங்களில் கண்டு வார்த்தையாடுவதுண்டு. வழக்கப்படி ஒரு நாள் ராஸிலஸ் அவனைக் கண்டு சம்பாஷித்துப் பொழுது போக்கப் போனபோது, அவன் மரக்கலத்தைப் போலப் பாய்வலித்து ஓடும் ரதம் ஒன்றுநிர்மாணித்துக் கொண்டிருந்தான். வித்தகன் கருதியபடி அந்த ரதப் ஒப்பமான தரையில் செல்வது சாத்தியமென்று கண்டு, ராஸிலஸ் அவன் யுக்தியை வியந்து பாராட்டி, வேலையை அவை குறையின்றி முடிக்க நயந்து கேட்டான். அந்தக் கைவினைஞன் சக்கிரவர்த்திபுத்திரனால் தனக்கு இத்தனை மதிப்பு உண்டானது கண்டு இதயம் மகிழ்ந்து பின்னும் உயர்ந்த கௌரவம் பெற வருந்தி உழைக்கும்படி நிர்ணயித்தான். அப்பால் யாந்திரிகன் "துரைசிங்கமே, யாந்திரிக வித்தையின் துணையால் இயற்றக்கூடும் அதிசயங்கள் எண்ணிறந்தன உண்டு. தாங்கள் கண்டவைகள் இரண்டொன்றுதானே. மனுஷர் நிலத்திலும் நீரிலும் போக வர வாகனமாகப் பிரயோகிக்கும ரதமும் மரக்கலமும், குறித்துச் செல்லும இடத்தில் கடுகெனக் கொண்டுபோய்ச் சேர்க்கத் தக்கவைகளல்ல. அவை தாமசகதியாய்ச் செல்வன. ஏற்கும் எத்தனம் செய்து, மனுஷர் பக்ஷிகளைப்போல் இறகு கட்டி விரைவில் பறக்கினும் பறக்கலாம். வாயுவின் குணத்தையும் கிரியைகளையும் கலைகள் தப்பற வகைய

றுத்திருக்கின்றனர். மனுஷரில் மூடரும் சோம்பரும் தவிர, மற்றவர்கள் பூச்சி புழுக்களைப்போலத் தரையில் நகர நிமித்தம் இல்லை. இந்தத் தாற்பரியம் என் இதயத்தில் உற்பத்தியானது இன்று நேற்று அல்ல, வெகு நாள் முந்தியே என மொழிந்தான்.

எரிகிற நெருப்பில் நெய் விட்டதுபோல யாந்திரிகன் வாக்கினின்று பிறந்த இம்மொழி செவிப்படவும் ராஜகுமாரன் இதயத்தில் மூண்டிருந்த மலை தாண்டும் ஆசை எனும் நெருப்பு குப்குப்பென்று எரிந்தது. யாந்திரிகன் இயற்றிய அதிசயங்களைக் கண்டு பின்னும் பல அதிசயங்கள் இயற்றமாட்டுவானென்று எண்ணி ராஜகுமாரன் மனம் உடன்பட்டது; உடன் பட்டும், இயலாதது இயலுமென்று எண்ணி, சற்றிலே ஏமர்ந்த் துய நாரவண்ணம் விஷயத்தை இன்னும் நுழைந்து விசாரித்தறிய அவன் சங்கற்பித்து யாந்திரிகன் கேட்கப் பின்வருமாறு பேசினான்:—"உமது சம்பாவனை செய்திறத்தை மேற்கொண்டதுபோலும். நீர் அறிந்ததையல்ல ஆசையுற்றிருப்பதைச் சொன்னீரென்று என் மனம் சிறிது ஐயப்படுகின்றது. பிராணிகள் அனைத்திற்கும் அதற்கு உரிய நிலயம் பகவானால் ஏற்பட்டிருக்கின்றது. பக்ஷிஜாதி சஞ்சரிப்பது ஆகாயத்தில்; மற்ற விலங்கு ஜாதிகளும் மனுஷரும் பூமியில் இப்படி ராஸிலஸ் சொல்ல, யாந்திரிகன் "வாஸ்தவந்தான் அவ்வாறே மச்ச ஜாதி வாழ்ந்திருப்பது நீரில்; நாற்கால் விலங்குகள் நீரில் நீந்துவது சகஜம். யுத்தியால் சில உபாயங்களை அனுசரிக்கும் மனுஷருக்கும் நீந்தும் யோக்கியதை கைவரும். ஏற்கும் உபாயம் சூழ்ந்து நீரில் நீந்தப்பயின்றவன் எத்தனித்தால் அவ்வாறே ஆகாயத்தில் பறக்கவுங்கூடாதா; கூடாதென்று எண்ணித் துயருற நிமித்தம் இல்லையே. நீந்துவதும் பறப்பதும் ஒன்றே. நீந்துவதற்கு நிலை நீர், பறப்பதற்கு நிலை வாயு. நீர், வாயு இவ்விரண்டும் திரவம். ஆனால் நீர் ஸ்தூல திரவம்; வாயு சூக்ஷ்ம திரவம்—இதுதான் இவ்விரண்டுக்கும் உள்ள பேதம். நாம் ஊடறுத்துச் செல்லும் நீர்-வாயு இவ்விரண்டின் அணுவடர்த்தி-அடர்த்தியின்மையை அளவறுத்து, அவ்வளவிற்கு ஏற்கப் பலம் கூட்டியுங்குறைத்தும் தாங்குவதன்றி மற்றொரு புதுமையும் செய்ய வேண்டுவதில்லை. தமது உடற்கனம் தாக்கி வாயு விலகும் விரைவினும் மிக்க விரைவுடன் மீண்டு அணைத்து அமர்த்துவீரானால் அவ்வாயு தம்மை விழவொட்டாமல் தாங்குவது நிசம்" என விரித்துரைத்தான்.

அப்பால் அரசன் மைந்தன் யாந்திரிகனை நோக்கி சொல்லக் கேளும், யாந்திரிகரே நீந்தப் பயில்வது என்ன லேசா? மிகவும் கஷ்டம நீந்துவோர்க்கு கைகால் முதலிய அவயவங்கள் எவ்வளவு உரத்திருப்பினும் சற்று நேரத்திற்குள் சலித்துப்போம். ஆகாயத்தில் பறக்கும் சாதகம் உடலைப் பின்னும் வருத்துமென்று எனக்கு சந்தேகம் தட்டுகின்றது. நீரில் நீந்தும் தூரத்திலும் அதிக தூரம் ஆகாயத்தில் பறக்க நிர்வாகம் இல்லாதிருப்போமானல், சிறகு இருந்து உண்டாம் பெரும்பயன் என்ன? என வினவினன்.

இது கேட்டு யாந்திரிகன் "முதலில் தரையினின்று எழுவது கஷ்டந்தான். இதற்குத் திர்ஷடாந்தம் வீட்டில் வளர்க்கும்கோழி வாத்து முதலிய பக்ஷிகளின் இயற்கையைக் கண்டு அறியலாம். தரையினின்று எழுந்து உயர உயர, பூமியின் ஆகருஷணசக்தியும் உடலின் குருத்துவமும் படிப்படியாய் இளைத்துவரும். உயரப் பறந்தபின் உடல் தரையில் இறங்காமல் அந்தரத்தில் நிற்கும். அப்புறம் எவ்வளவும் சிரமம் வேண்டுவதில்லை. அற்ப முயற்சியால் நெடுக்குக் குருக்கு இருவழியும் பறக்கலாம். பல துறைகளிலும் நுழைந்து நுட்பவிசாரணை செய்து பயின்றதுரையே கேளும். சிறகு கட்டிப்பறந்து ஆகாயத்தில் வட்டமிடும் கலைவல்லோனுக்குக் கீழே பூமி பிரஜைகளுடன் உருள்வதையும்,பூமியின் திருந்தரகதியால் ஒரு அக்ஷரேகையின் எல்லைக்கு உட்பட்ட நானாதேசங்களும் அதன் இடத்திலிருப்பதையும் தடையறக் கண்டு ஆனந்தம் உண்டாம்- தரை சமுத்திரம் நகர் வனம் இவைநடைபெறுவதைக் காண்பதும் வர்த்தகம் வள்ம்பெற நடக்கும் கடைகளைப்போல ரணகளங்களையும் அச்சமற்று ஆய்ந்தோய்ந்துபார்ப்பதும் கண்டகர் வாழும் குன்றம் நிலவளமுதலிய பலவளம்மலிந்து நிஷ்கலக ஸ்திதியில் பிரஜைகள் ஆசோதையாயிருக்கும் பிரதேசம் இவை கண்ணுக்கு எதிர்ப்படுவதும் உயரப் பறக்கும் மேற்படி கலைவல்லோனுக்கு எத்தனை இன்பமாயிருக்கும். நதியரசென்று நாற்றிசையும் பெயர்பெற்ற நீல்நதி மார்க்கத்தை முழுதும் கண்டறிந்து தூரப் பிரதேசங்களுக்குப் போய் பூகோளத்தின் ஒருமுனை தொடங்கி மறுமுனை வரையும் நெடுக்குக் குறுக்கு எங்கும் உள்ளவைகளைப் பரீக்ஷித்தறிவோம் என்றான்.

கமலாவதி.

(முன் தொடர்ச்சி.)

இங்ஙனமாக சென்ற அரசனாகிய சிங்காரலோசனன் அநேக காடுமலை வனாந்திரங்கடந்து ஓர் சோலையினிடத்தில் தங்கி அங்குள்ள தடாகத்திற் சென்று தானுந் தன் ஆசைநேசமாகியகமலாவதியும் தாகசாந்தி செய்து களிப்புற்றிருக்கும் தருணத்தில் முன்னொரு தரம் சிங்காரலோசனனுக்கு ஆரண்யத்திலுபதேசித்த சந்யாசியானவர் தோன்றினார். அரசன் அன்னவரைக் கண்டு வணங்கி ஆனந்தபரவச மெய்தினான். உடனே சந்யாசியானவர் அரசனை நோக்கி அரைக்கண் பார்வையோடு அருட்புரிந்து அப்பனே சிங்காரலோசனா யானொன்று செப்புகிறேன் கேட்பாயாக. முன்னாடி நீ நம்மைக்குறித்துத் தவம்புரிய வந்தபோது நின் துஷ்டமந்திரியான மனமோகனன் உனது பத்தினியாகிய சித்திரரேகைதனித்திருக்கும் அந்தப்புரஞ்சென்று துராக்கிருதமாய் அன்னவளைக் கற்பழிக்க வெத்தனித்தனன். அன்னவள் நம்மை கோரிவேண்டல் புரிந்தாள் அவ்விதமேயான் உனது மனைவி கல் ஸ்தம்பமாகவும் அன்னவனுக்கு இரண்டு நேத்திரங்களுங் கெடச் செய்தோம். ஆகவே நீ இச்சக்ராயுதத்தால் அச்சண்டாளன் சிரசைக்கொய்து இவ்விபூதியால் உன் மனைவியையெழுப்பி இரண்டு மனைவியருடன் சேர்ந்து, இரண்டு சற்புத்திரர்களைப் பயின்று, சுகமே அவ்விரத்தின புரியை அரசாக்ஷி புரிவாயெனப் பரமன் திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். பின்னர் பரமன் மறைந்தவுடன் சிங்காரலோசனன் மூர்ச்சித்தானென நாம் சொல்லாமலே இந் நாவலை வாசிக்கும் வாசகர்கள் அறிவார்களாக. அங்ஙனமாக சிங்காரலோசனன் ஆ! ஹா என்னிடம் வந்தவர் பரமனன்றோ அறியாது போய்விட்டேனே சம்போசங்கரா யான்மௌடீக புத்தியுள்ளவனாய்விட்டேனே. என்றின்னனையபல விதமாய்வருந்தி தன் ரத்தினபுரியை நாடித்தன் பத்தினி கமலாவதியுடன் நடந்து குன்றுகளும் சோலைகளும் வனங்களும் கடந்து தனக்குப்பரமனால் கிடைத்த வாளையும் விபூதியையும் கையிற்பற்றி, சீக்கிரமாக நடந்து கொண்டிருந்தான்.

இப்போது அரசன் ஆரண்யங் கடந்து அரமனைச் சேர்ந்து அவ்விடத்திலுள்ள தாதியர்களால் தன்மந்திரி செய்த அக்கிரமத்

லதக்கேள்வியுற்று, பின்னர் கல்ஸ்தம்பமாக நிற்கும் தனது பத்தினி சித்ரரேகையை பரமனால் கொடுக்கப்பட்ட விபூதியால் எழுப்பி நடந்தவற்றை மனைவியால் சொல்லக்கேட்டு துக்க சாகரத்தில் அமிழ்ந்தான் பின்னர் சித்ர ரேகையானவள் தன் கணவனை நோக்கி யென் இன்ப மணாளரே மிக்க கொடிய துஷ்ட மந்திரியானவன், தாங்கள் சென்றபின் அச்சமின்றி என்னையிச்சித்தானாயினும் இக்கொடியவனை யின்னும் கொலைத்து விடாமல் உயிரோடு வைத்திருந்தால், தங்கள் அரசாட்சிக்கு ஹானிநேர்வதோடு தங்கள் உயிர்க்கே உலைவைத்து விடுவான் என்றுத்தன் கணவனாகிய சிங்காரலோசனனுக்கு சாவதானமாக எடுத்துக் கூறினள். அங்ஙனமாக மொழிந்ததை நமது அரசசிகாமணி கேட்டுதீர்க்காலோசித்து நியாய மெனத்தெரிந்தானெனினும் மந்திரியான மனமோகனனை கொலைபுரிய அஞ்சியவனாய் மனங்கலங்கியபின்னர் ஓர் திடசித்தமானது மனத்திலுற்றெழுந்தவுடன் அன்னவனைக் கொலை செய்திட வெண்ணியவனாய் அவ்விடமிருந்த இரண்டு காவலர்களை அழைத்துக்கொண்டு ஓர் கடிதத்தை கையிற்பிடித்து இதோ இந்த க்ஷணத்திலேயே யென் கீர்த்தி முற்று மழித்த அம்மனமோகனனை என் கைவாளுக்கிரையாக்கசெல்கின்றேனென விரைந்துசென்றான்.

அங்ஙனமாகச் சென்ற சிங்காரலோசனனும் இரண்டு கொலைஞருமாக மந்திரி மனமோகனனிருக்கும் அரண்மனை சென்றனர். தப்பித்துக் கொண்டோமென நினைத்திருந்த துஷ்ட மந்திரியானவன் அரசன் வந்துவிட்டானெனக்கேட்டு மெய் நடுங்கி உள்ளந் திடுக்கிட்டு அங்கோர் நாற்காலியிலுட் கார்ந்துஎண்ணமிட்டுக் கொண்டிருந்தான். சிங்காரலோசனன் தன் வசமாயிருந்த கடித மொன்றை அங்ஙனமாக நின்றிருந்த வேறொருவனிடம் கொடுத்து வாசிக்கச் சொல்ல, அங்ஙனமேயவன் அதை முற்றும் வாசித்துக்காட்டப்பின்னர் கண்கெட்டமந்திரி யான் கத்தியால் வெட்டுண்டிறக்க அரசர்க்கு யாதுபிழைசெய்தேன்என்றான், ஓர்கொலைஞன் சிறியதோர், எலியைப்பூனையான துபிடிக்குமாறு ஒரேபிடியாய்ப் பிடித்துகைகளைப்பிணித்தான். சிங்காரலோசனன் அவன் மேற்பாய்ந்து தன் கைவாளை யோச்சி மனமோகனனுடலை இரண்டு துண்டாக்க கீழ்விழுந்தனன். மிகக்கொடியவனான

"அகரவுயிர் போலறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து" (திருவருட் பயன்)

"அகண்டாகாரசிவ போகமெனும் பேரின்ப வெள்ளம்பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏகவெளியாய் கிடைக்குதையோ" என்ற அனுபூதி செல்வத் திருவாக்காயாறு ஒளிருவது சிவம் ஆதலால், சிவத்துக்கேது குலம்? சிவதத்துக்கேது குலபேதம்? சிவத்துக்கேது இடம்? சிவத்துக்கேது இடபேதம்?

சுட்டலற்றதாய் பரிபூரணமாய் வியாபித்திருப்பது சிவசச்சொருபம் சிவசச்சொருபத்தை யுணர்ந்து தன்னையும் சிவமாய்க் காணற்கே கருவியாவது வேதாகமங்கள். அவ்வண்ணந் தன்னைக் காண்டலே சிவன் முக்தபதமென்றும், அதையே துரியதானமென்றும், அதையே அபரோட்ச ஞானமென்றும், அதையே சமாதியென்றும், அதையே தாரணையென்றும் அதையே நிட்காமிய தவமென்றும், உத்தரமீமாம் சசித்தார்த்த பிரபலபோதம் என்றும், அதையே சாமனுதிகரண சம்பத்தாஞ்சதுர்வேத தாற்பரிய மூலசுருதித்துவ மென்றும், கூறக்கிடக்கின்றன சுருதிஸ்மிருதிகள். இதுவே "சர்வம்பிரம்மமயம்சகத்" என்றவாக்கியபரிபாலனை சிவமயப்பிரே ரேபணையாகும். ஒருவன் தன்னை விசாரியாதிருக்குமளவும் சீவனென்றும், விசாரித்துத் தெளியின் சிவனென்றும் கொள்ளற்பாற்று இந்துமத கருத்து. அப்படியாகவே தன்னை ஞானத்தாலும், யோகத்தாலும், தரிசித்தாலுஞ்சரி. அல்லது பிறரை சிரத்தாபத்தி விநயத்தாலும் அல்லது உபசரிகவாத பத்தியாலும் தரிசித்தாலும் சரி சிவமயமென்றே கொள்ள விரிந்தது இந்துமதம். இவ்வருநெறி முகனில் அருநெறிபகரும் புத்தம் சமணம் விரோதித்த தெப்படி?

வாதத்தால் எனின் நிக்ரஸ்தானம் பெற்றுரெவர்? புத்தர் சமணரே எனின் ஆதாரமென்ன? "எண்ணாயிரஞ் சமணர் கழுவேற பட்டனர்" புனலிலே டெதிர்செல்லெனசென்ற தென்ற புராண போதமேயெனின் அரிட்டவர்க்கத்தை யடியோடு தள்ளும் விரோதமுடைத்தான அருஞ்சைவம் 8000 சமணரைக் கழுவேற்றியது! நீதியாமோ? அளவு மீறியதண்டனையன்றோ? வாதம் இராஜோகுணத்தது. கவேழுற்றீ சித்திரவதை புரிதல் தாமத

குணத்து. இராஜோகுணத்தது இராஜோகுணத்தே விவகரித்துசத்துவத்தடக்கலே தர்க்க லட்சணமாகும். அப்படியன்றி ஷடிகிகழ்ச்சி குணமாறலேத் தோற்றுவித்தலின் விதண்டாவாத தெர்க்கிகளாய்த் தோன்றினர் அச்சைவ வாதிகள் என்றன்றோ உண்மைப் பொருட்படுகின்றது. ஆம் என்று அனுசந்தித்தற்கும் காலதேச வர்த்தமானங்களும் ஒத்துத் தொனிக்கின்றன.

எப்படியென்றால் அக்காலம் புத்தமதவெகு ஜனவழிபடு மார்க்கந்ததா யிருந்தது. தேசபுத்தமதமன்னர் வயப்பட்டிருந்தது. வர்த்தமானமோவெனின் புத்தர் பிரத்தியட்ச அனுமான மொன்றையே சிறப்பாயேற்பர். அத்தியட்ச மதீதமாயின் விடுப்பர். அத்தியட்சமாகிய ஈஸ்வரன் மோட்சம் நரகம்என்பவையவர்க்குப் பூர்வபட்சமே ஆயின் அவர் விதிவிலக்கு தானென்னை யெனின்.

திருமந்திரம்.

அன்புஞ் சிவமிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்திலர்
அன்பே சிவமாவதாரு மறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.

என்றனஞ்சைவ சாம்பிரதாயமே தம்மவையாய், "தன்னைப் போற் பிறனைநேசி," என்ற பூரண அன்புகளஞ்சிய கட்டளை தாங்கும பஞ்சசில பாக்கியவான்களே யாவர் புத்தர். இப்படியாக ஈஸ்வரன் மோட்சம் நரகம் என்பவற்றைப் பிரத்தியட்சத்தில் அனுபவிக்கும் 8000 சமணர் (புத்தர்) தமதுவாதந் தோல்வியுற சைவம் வெற்றிக்கொண்டதை முன்னிட்டு, இனியாம் உயிர் வாழலாகா வென்று கழுகளத்தை நாடிச் சென்றதும் ஆச்சரியம் மதுரைமாநகர் இவ்வாத சம்பவகாலமாம். சுமார் இரண்டாயிர வருடங்கட்குமுன் கழுவேற்றமாண்ட 8000 சமணர்களேயன்றி வைகையான் விழுங்குண்ட கணக்ககன்று புத்தசமணர்களையுங் கொண்டிருந்த தென்பதும் தண்டாபூபிளை நியாயத்தால் அப் பெருந் திரளிடையில் சாதுக்களாகிய சைவர் சிலரே இருந்திருக்கலாம் அவர்கள் வாதிட்டார் என்பதும், ஆச்சரியம், தோல்வியானவரை 8000 என்று எண்ணரி கழுகளத்திற்கழைத்துச் சென்

ற்றதும், ஆச்சரியம் 8000 பேர்களுக்காக 8000 சமூநாயாரித்திருந்ததும் ஆச்சரியம் சித்திரவதை யுண்டுமரித்த அப்பிரேதங்கள் 8000, பின்னர் தகிக்கலாயிற்றோ அல்லது புதைக்கலாயிற்றோ, அதைகுறியாததும் ஆச்சரியம். அல்லது, அங்ஙனே புழுத்து நாறி கசிந்து கிடந்ததெனின் அக்காலையில் மதுரைமா நகரில் ஜனங்கள் சஞ்சரித்துயிர்த் திருந்ததும் ஆச்சரியம். ஆதலால் இச்சரிதை சாதிபேதமுண்டு படுத்தவும், தற்காலம் பறையரென்றழைக்கப்படும் யதார்த்தவாதிகளாகிய புத்தரைக்கீழ் மக்களென்று வருத்துத் தாழ்த்தவும், தம்மை மேன்மக்களென்று அறியாரை மருட்டித் தாமும் தஞ்சாதியும் சுகிக்கவும் செய்துகொண்ட முயற் கொம்புக்கதையே யாகும். இது ஒன்று மற்றதொன்றுக்காகவா, இதுகாறும் 16 சைவத்துள் தாம் எந்த சைவத்தாரென்றும் தேராதாராயினும்,

சைவசித்தாந்த சாத்திரம்.

ஒழுக்கமன்பரு ளாசார முபசார முறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
யழுக்கிலாத் துறவடக்கம் அறிவோடர்ச் சித்தலாதி
யிழுக்கிலா வறங்களானால் இரங்குவன் பணியரங்கன்

என்ற அறம்புரீனங் தொழுகாராயினும், தாமும் எசிதா! சைவர் என்றுத் தம்மைத் தாமே மதித்து பாவனை செய்யுங் கீழ் மக்களும் மெய்ப்பக்தரும்.

"புனலிலே டெதிர் செல்லென்ன செல்லுமே"

என்றுபாடி புத்தமதத்தைக் கண்டித்து வந்ததெனின் ஆம் அது வீண்படோடோபமும் விசாரணையின்மையுமே எனலாம். என்றபோதிலும் காரணமின்றிக் காரியநிகழா; இத்தியாதி புரட்டுக்கு மூலசரிதையொன் றிருந்தே தீரவேண்டும் பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிவது மியல்பு, ஆதலால் விசாரணை மலிந்த ஆன்றோர் தெளிவுறுத்துவரென எதிர் நோக்குகின்றனம்.

இயல்வது கரவேல்.

என்று மூன்னோர் அக்யாபித்திருத்தலால் அடியேனுக்குத் தெரிந்ததொன்றை வரையத்துணிதும் அதுவே அக்கதாசம் பவு

மூலமென நம்புகிறேன் அதாவது, இற்றைக்கு சுமார் இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னர் நேர்ந்த கொடியபஞ்சத்தால் சமண முனிவர்கள் 8000 பேர் தந்நாட்டை விட்டுத் தமிழ்சங்க நாடதிபனாகிய பாண்டியனிடம் சரண்புகுந்தார். அப்போது சங்கத் தமிழ் வித்துவான்களாயிருந்து பரோபகாரமாய் இலக்கணவிலக்கிய காவியங்களை வெளியிட்டு வந்துள்ள 49, புலவமணிகளும் ஏறக்குறைய சமணமதத்தாராகவே தோன்றப்பட்டிருந்திருக்கின்றார்கள். இது காரணத்தாலேயே 8000 சமணர் வேறு தேயஞ் செல்லாது பாண்டியனிடஞ் சென்றார் போலும் சிலகாலஞ் சென்றபின்பு பஞ்சம் நிவர்த்தியாகவே குடிபுகுந்த சமணர் தத்தமது நாட்டுக்கேக விரும்பி பாண்டியனை வினவ, பாண்டியன் சமணர் தஞ்சாதுரிய மறிந்தானாகலின், அவர்களைப் போகக்கூடாதென்று தடுத்து விடைதராதிருந்தார். ஏகும் ஏக்குள்ள எண்ணாயிரவர் தந்நாட்டுக்கேக ஆவலுற்று ஒருநாள் நள்ளிரவில் அரசனுக்குத் தெரிவியாது புறப்பட்டு தந்தேசஞ் சென்று விட்டார்கள்.

இவர்கள் பாண்டிநாட்டை விட்டுவிட்டதை அரசன்கேள்வியுற்று விசனித்து அன்னோர் வாசஸ்தானத்தைச் சென்றுப் பார்க்குங்காலை யவண்சில ஏட்டுப்பிரதிகள் கிடைத்தன.

குழவி பெறுமருமை கூன்மலடி தேராள்
வழுவில் கவிபாடும் வன்மை செழுமைபெறு
சொல்விரச மத்தம்சுவை யென்பன வெல்லாம்
வல்லவ ரல்லாரறியார் மற்று.

என்றபடி, கல்வியுணர்ந்தான் பாண்டியனாகலின் அவற்றை யொருங்கு திரட்டி அச்சிற் சில கவிதைகள் பற்பலராற் பாடப்பட்டிருத்தலின் ஒத்துக்கு முரணாகுமென்ற கருத்தே போலும் அவற்றைக் கிழித்தெரியாது வையைநதியில் எறிந்து விட்டனர். எறிவுண்ட ஏடுகளிற் சில நீர் பெருக்கால் எதிர் கொண்டுவந்தன (இவண் "புனலிடேல டெதிர் செல்லேனா செல்லுமே" என்பதைக்கவனிக்கத் தக்கது.) எதிர்கொண்ட ஏடுகளை யொன்றாய்த்திரட்டிக் காணுமளவில் அவை அறம், பொருள், இன்பம், பயக்கும் நானூறு பாடல்களாக விளங்கின.

இதுவேபதினெண்கீழ்க்கணக்கு நூற்களி லொன்றாகிய நாலடியார் என்ற காரணப் பெயரேற்று, ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலுமிரண்டுஞ் சொல்லுக்குறுதி' என்ற பழமொழி யாணியேற்று புலவர் மாட்டுப் புகழோங்கி யுலவலாயிற்று.

இந்த நாலடியார் பிரபந்த பாயிரமே 8000 சமணர் என்ற சங்கைக்கும் புனலின்மேலெதிர் சென்றதென்ற சங்கைக்கும் போதரும் ஆற்றாய்க்கூறுவார்க் கூற்று. இகபர செல்வ அமல பூஷண நித்திய மார்க்கமாகிய சைவத்திற்கே தூஷணை தேடுவதாய் முடியும்.

நன்னூல்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்பதை முடிக்கொண்டு சைவசிகாமணிகளா யுள்ளாரனைவரும் பரந்தவிடயம் ஒவ்வொன்றையும் விசாரித்துஉண்மையைப் பெருக்கி ஜனவிருணீக்கி சுத்த பரமார்த்த சைவசமய கருத்துகளைப் பொது ஜனப்பிரயோஜனமாக வளர்ப்பாராக.

தி. ஆ. பெ.

எலுமிச்சை சாகுபடி.

தஞ்சாவூருக்கு அடுத்த அய்யம்பேட்டை என்னும் கிராமத்தில் எலுமிச்சை ஏராளமாய் சாகுபடி ஆகிறது.

பூமி.—எலுமிச்சை சாகுபடிக்கு நல்ல வடிகாலுள்ள வண்டல் பூமி சிரேஷ்டம்.

நாத்தாங்கால் பூமியை இரண்டு அடிஆழம் கொத்தி புழுதி செய்கிறார்கள். அதில் நன்றாய் மக்கின மாட்டு எருவை ஏராளமாக கம்போட்டுமெண்ணுடன் கலக்கவேண்டும். மாசி(பிப்ரவரி=மார்ச்சு) மாதத்தில் மாத்தடியில் விழுந்திருக்கும் நல்ல பழங்களை அறுத்து காயப்படாமல் எடுத்தவிதைகளை கையில்ஒட்டாமலிருக்கும்படி கொஞ்சம் சாம்பலில் புரட்டி பின் விதைகள்காய்வதற்குமுன் தயார்செய்த பூமியில் 4அங்குலத்துக்கு ஒரு விதையாக ஊன்றுகிறார்கள். பிறகு அந்த நாததாங்கால்மேல் வாழை

சறகுகளை போட்டு போட்டு ஈாத்தாங்கால் காயாமல் ஜலம் விட்டுவருகிறார்கள். களைகளை கையால் எடுத்து விடவேண்டும். கார்த்திகை மாதத்தில் கன்றுகள் சுமார் ஒருஅடிமுதல் இரண்டு அடிவரை வளர்ந்திருக்கும். இப்போது இரண்டு அடிக்கு ஒரு கண்ணாக விட்டு விட்டு நடுவிலுள்ள கன்றுகளை ஜாக்கிரதையாய் பிடுங்கி இவைகளுக்காக வெட்டி எருவிட்டு தயார் செய்யப்பட்ட பூமியில் இரண்டு அடிக்கு ஒன்றாக நடுவார்கள். வெயில்கால முழுவதும் செடிகள் காயாமல் ஜலம் இறைத்து வரவேண்டியது. இப்படி வளர்த்த மூன்று வருஷத்திய கண்களை ஆழமாய் கொத்தி எருவிட்டு தயார்செய்த பூமியில் 15 அடிக்கு ஒரு வரிசையாகவும் ஒவ்வொரு வரிசையிலும் 15 அடிக்கு ஒரு செடியாகவும், கார்த்திகைமாதத்தில் நடுகிறார்கள். இச்செடிகளுக்கு மத்தியில் கண்கள் மரமாகும்வரை வாழைபயிர் செய்வதுண்டு. செடிகள் வைத்த மூன்றாவது வருஷ முதல் பலன்கொடுக்க ஆரம்பிக்கிறது.

வருஷாவருஷம், தோட்டத்தை கொத்தி நன்றாய் மக்கின சாணம் எருபோடவேண்டியது. அம்மா பேட்டையில் அநேகமாய் மார்கழி மாசத்தில் கொத்தி எரு இடுகிறார்கள். ஆவணி மாதத்தில் கொத்தி எருவிட்டால் மழையினால் எருவின் பலன் நன்றாய் புலப்படும். பிறகு மார்கழி மாதத்தில் ஒரு கொத்து மாத்திரம் போட்டால் புல்பூண்டு வடிவதுடன், பூமி தளர்ந்து ஈரம் காக்கும். சாணி எருவே உத்தமம். எலும்புதூள் பலனை விருத்தி செய்யும்.

கவாத்து:—செடிகளில் உலர்ந்த கிளைகளை அப்போதைக்கப்போது ஜாக்கிரதையாய் கத்திரித்து விடவேண்டும். ஒவ்வொரு செடிகளும் பூமியிலிருந்து வரும் ஒன்று அல்லது இரண்டு பெரிய கிளைகளைமாத்திரம் விட்டுவிட்டு பாக்கி உபகிளைகளை நீக்கிவிடவேண்டும். கொத்திவிடவும், பழம் பொருக்கவும், காத்தோட்டத்துக் காகவும்செடிகளில்கீழ்கிளைகளை அதிகமாய்வைக்காமல் நீக்கி மேல்போகச்செய்வது உத்தமம். வெயில்காலமுழுவதும் ஜலம் இறைத்து செடிகளை பாதுகாத்துவரவேண்டும்,

இப்படி ஜாக்கிரதையாய் தோட்டத்தை ஆசரித்துவந்தால் சராசரி ஒவ்வொரு செடிக்கும் 1000 முதல் 3000 பழம்வரை கிடைக்கும்.

பாலூர் மகாம், 1909 வரு செப்டம்பர் மீ 23உ

எஸ். சுப்ரமணிய அய்யர்,
மானேஜர்,
விவசாயபண்ணை.

கோயம்புத்தூரிலிருக்கும் விவசாய பாடசாலை.

இந்த விவசாய பாடசாலை கோயம்பத்தூர் பட்டணத்திற்கு மேற்கே மூன்றுமயில் தூரத்தில் தெலுங்குபாளையம் கிராமத்திலும் குமரபாளையம் கிராமத்திலும் ஸ்தாபித்திருக்கிற சர்க்கார் பண்ணையிலிருக்கிறது. இந்த பண்ணையின் விஸ்தீர்ணம் தெலுங்கு பாளையத்தில் 400 ஏகராவும் குமரபாளையத்தில் கிருஷ்ணம்பதி ஏரிபாய்ச்சலுள்ள 50 ஏகரா நன்செய் நிலமுமுள்ளது. புன்செய் நிலங்களின் மண் கரிசற்காடும் செம்மண்ணுமுள்ளது. செம்மண்நிலம் அனேகமாய் கிணறுகளால் நீர் பாய்ச்சப்படுகிறது.

இந்த விவசாய பாடசாலையின் கருத்து இந்துதேசத்துவிவசாயத்தை சீர்திருத்துவது தான். அப்படி சீர்திருத்துவதின் முக்கிய அம்சங்களாவன:—

1. நிலச்சுவான்களின் பிள்ளைகளை விவசாயவிஷயங்களில் சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி செய்தல்.

2. விவசாய விஷயங்களை விவசாய பாடசாலையின் வழியாய் பரவும்படி செய்தல்.

3. சிறுவர்களுக்கு விவசாய சாஸ்திரங்களைக் கற்பித்து அவர்களை தங்கள் சொந்த நிலங்களுக்காகவாவது இதராளுடைய நிலங்களுக்காவது மானேஜர்களாக தகுதியுள்ளவர்களாக்குதல்.

விவசாய பாடசாலையின் மாணாக்கர்கள் மூன்று பிரிவாக பிரிக்கப்படுகிறார்கள். அதாவது, முதல் வருஷத்திய மாணாக்கர்கள், இரண்டாம் வருஷத்திய மாணாக்கர்கள், மூன்றாம் வருஷத்

கிய மாணுக்கர்கள். வழக்கமாய் மாணுக்கர்களை செஷன் ஆரம்பமாகிய ஜூன் மாதத்தில் பாடசாலையில் சேர்ப்பார்கள்.

முதல் வருஷத்திய மாணுக்கர்களுக்கு கற்பிக்கும் விஷயங்கள். விவசாய தொழில்களுக்கு ஆதாரமாகிய விவசாய சாஸ்திரங்கள். அவையாவன:—

1. ரசாயன சாஸ்திரம் (கெமிஸ்டிரி),

2. தாபர சாஸ்திரம், அதாவது புல், பூண்டு, செடிகளைப் பற்றி சொல்லும் சாஸ்திரம் (பாடனி),

3. தத்துவ சாஸ்திரம் அல்லது சடஜித்து சாஸ்திரம் (Physics), அதாவது, இந்த உலகத்திலுள்ள சடங்களைப்பற்றி சொல்லும் சாஸ்திரம்.

4. பூகோளத்தின் இயல்பு சாஸ்திரம், அதாவது பூகோளத்தின் மேலுள்ள நிலம், நீர், ஆகாயம், காற்றுவீசுதல், சமுத்திரம், ஜீவஜெந்து முதலியவைகளைப்பற்றியும் உலகத்திலுள்ள அனேக சாரங்களைப்பற்றியும் சொல்லும் சாஸ்திரம்.

5. சிற்றுயிர் நூல் (Entomology), அதாவது சிறு உயிர்களாகிய பூச்சி, புழு, முதலியவைகளைப்பற்றி சொல்லும் நூல்:

மேலும் விவசாய வேலையில் பிள்ளைகளை பயிற்சி செய்யும்படி செய்கிறார்கள். இன்னும் பரிசோதனைக்காகவும் ஊர்களில் உபயோகப்படுத்துவதற்காகவும் அப்போதைக் கப்போது விவசாய டிபார்ட்மெண்டார் கொண்டுவரும் அனேகவித விவசாய கருவிகளின் உபயோகத்தைப்பற்றியும் மாணுக்கர்களுக்கு கற்பிக்கிறார்கள்.

மேற்கூறிய சாஸ்திரங்களை கற்பிப்பதில் அந்த சாஸ்திரங்களில் சொல்லியவைகளை சாதனப்படுத்தும்படி செய்கிறார்கள். இப்படி கற்பிப்பதால் மாணுக்கர்கள் சாஸ்திரங்களில் சொல்லிய விஷயங்களை தாங்களே திருஷ்டாந்தமாக செய்து பார்வையிட்டு அவ்விஷயங்களை அறிந்துகொள்வார்கள்.

இரண்டாவது வருஷத்தில் மாணுக்கர்களுக்கு விவசாய தொழிலுக்கு வேண்டிய தாபர சாஸ்திரத்தை கற்பிப்பார்கள்.

மேலும் சிற்றுயிர் நூலையும் கற்பிப்பார்கள். சிற்றுயிர்கள் பயிர்களை நாசம்செய்வதை தடுக்கும்படியான விஷயங்களையும் கற்பிப்பார்கள். இந்த வருஷத்தில் சரியான விவசாய தொழிலை கற்றுக்கொள்வார்கள், அதாவது, ஒவ்வொரு மாணாக்கனும் ஒரு துண்டு நிலத்தை தானே உழுது பயிரிடுவான். மேலும், விவசாய யந்திர மராமத்து விதிகளையும் நில அளவை விதிகளையும் கற்பிப்பார்கள்.

மூன்றாவது வருஷத்திய மாணாக்கர்களுக்கு கற்பிக்கும் விஷயங்களாவன:—

1. விவசாயம்.

2. விவசாய யந்திர மராமத்துவிதிகள்.

3. விலங்கின் நோயை ஆற்றுதற்குரிய சாஸ்திரத்தில் மிருகங்களின் சாதாரண நோய்களைப்பற்றியும் அந்நோய்களை தீர்க்கும் விதிகளும்.

விவசாய தொழில் பயிற்சியில் ஒவ்வொரு மாணாக்கனும் தானே ஒரு துண்டு புலனைப் பயிரிட்டு, பயிரிடும் விஷயங்களையெல்லாம் அப்போதைக்கப்போது சாகுபடியின் குறிப்பு காகிதத்தில்எழுதிவைத்து கடைசியில் தான்பயிரிட்ட நிலத்தில்பயிரிடுவதால் உண்டாகும் லாப நஷ்டத்தை தெளிவாய்எழுதி பண்ணைத்தலைவருக்கு அனுப்பவேண்டியது.

மாணாக்கர்கள் வாசிப்பதற்கு விவசாய காலேஜுக்குஅருகாமையிலேயே பத்து இல்லிடங்கள் கட்டியிருக்கின்றன. ஒவ்வொரு இல்லிடத்திலும் ஆறுபேர் வசிக்கும்படி ஆறு அறைகள் கட்டியிருக்கின்றன. இவ்வாறு அறைகளுக்கும் ஒரே சமயலறையும் போஜன அறையுமுண்டு. இப்படி பத்துஜாதி மாணாக்கர்களுக்கும் இடம் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது ஒவ்வொரு இல்லிடத்திலுள்ள ஆறு மாணாக்கர்கள் ஒன்றுசேர்ந்து ஒரே சமயல் பாத்திரங்களையும் சமயற்காரனையும் வைத்துக்கொள்ள வேண்டும்.

மாணாக்கர்களிடத்திலிருந்து அவர்களை கற்பிப்பதற்கும் அவர்கள் இல்லிடங்களில் இருப்பதற்கும கட்டணம் வசூல்செய்வதில்லை. ஆனால், அவர்கள் தங்களுடைய சாப்பாடு முதலியவற்றிற்குவேண்டிய சிலவை கொடுக்கவேண்டும். இந்தசிலவு அவாளவாளுடைய வேண்டுகோளின் படி வித்தியாசப்படும். ஆனால், மாணாக்கரெல்லாம் ஒன்றுசேர்ந்து வசிக்கும் விஷயத்தில் மரக்கறி பதார்த்தம் சாப்பிடுவோர்களுக்கு மாதத்திற்கு ஒருவனுக்கு பத்துரூபாய்க்கு அதிகப்படாது. எண்ணெய் ஸ்நானத்திற்கு வேறே பணம் கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மாணாக்கனும் பாடசாலையோடு சேர்ந்திருக்கும் தேகப் பயிற்சி சங்கத்தில் சேரவேண்டும். இந்த சங்கத்துக்கு பிரவேசகட்டணம் வருஷத்திற்கு ரூபாய் மூன்று. சமாசார பத்திரிகைகள் வாங்குவதற்கும் வாசககூடம் வைத்திருக்கவும் ஒரு மாணாக்கர்களுடைய சங்கம் ஸ்தாபித்திருக்கிறது. அதற்கு வருஷ சந்தா ரூபாய் மூன்றாக நியமிக்கப் பட்டிருக்கிறது.

கோயம்புத்தூர்
1903-வருஷம் அக்டோபர்-மீ. 16உ } வி. ஜே. டப்ளியூ. ஜெப்பஸன்.
விவசாய பாடசாலைத் தலைவர்,

அத்துவித சித்தாந்தம்.

68-ம் பக்கத் தொடர்ச்சி.

சைவ சித்தாந்திகள் ஜீவர்கள் பல என்றால் வேதாந்திகளும் அங்ஙனமே யென்கிறார்கள். சித்தாந்திகள் சிவன் அல்லது பிரமத்தை யொன்றென்றால் வேதாந்திகளும் அங்ஙனமே பகர்கின்றார்கள். இருகக்ஷிக்காரர்களும் ஜீவர்கள் விஷயத்திலும் பிரமம் அல்லது சிவன் விஷயத்திலும் ஒத்துப்போனார்கள். இனிபாக்கி நிற்பது ஒன்றே அதுதான் ஆன்மாவென்பது. இந்த ஆன்மாவைப்பற்றி தான் இப்போது விசாரணை. எந்தப் பொருளுக்கு சிவன் அல்லது பிரமமென்று வேத சாஸ்திரங்களில் பேரிடப்பட்டிருக்கிறதோ, அந்தப் பொருளுக்கு ஆன்மாவென்னும் பேர் இடப்பட்டிருக்கிறதா? இல்லையா? சிவனுக்கும் சீவனுக்கும் ஆன்மாவென்கிற பேர்இருக்கிறதே யென்னின் இருக்கிறது என்பது உண்மைதான். ஜீவனுக்குஆன்மபதத்தைஉபயோகிக்கும்போது ஆன்மா அணுவாகின்றது. சிவன் அல்லது பிரமத்திற்கு உபயோகிக்கும்போது ஆன்மா பரிபூரணமாகின்றது. வேதாந்திகள் இவ்

விருபேதங்களையும் உணர்ந்திருக்கின்றமையால் எது எதையெங்கெங்கே யுபயோகிக்க வேண்டுமோ, அது அதை யங்கேயுபயோகிக்கின்றார்கள். பரிபூரணமான சிவ பிரமத்திற்கு வேறாகப் பரிபூரணமான ஆன்மா வென்பதொன்றுண் டென்னின், அந்தப் பரிபூரண ஆன்மா, அந்தப்பரிபூரண சிவபிரமத்திற்கு எப்பக்கத்தில் இருக்கின்றது? மேலே இருக்கின்றதா? கீழேயிருக்கின்றதா? பக்கங்களிலிருக்கின்றதா? எங்கிருக்கிறதாகச் சொன்னாலுஞ்சரி சிவப்பிரமம் கண்டப்பொருளாய் விடும். அது மாத்திரமா தனித் தனிப் பரிபூரண மெனச் சித்தாந்திகளாற் சொல்லப்படும் ஆன்மாக்கள் யாவுமே கண்டப்பொருளாய்விடும். சிவப்பிரமத்துக்கு மேலாவது கீழாவது பக்கங்களிலாவது ஆன்மாக்கள் இருக்கின்றன வென்று சொல்லும்போது ஷை மேல்கீழ்பக்கங்களில் சிவப்பிரமம் இல்லாமற்போம் கடத்துக்கு மேலாவது கீழாவது பக்கங்களிலாவது படமிருக்கிறதென்றால் அந்தப்படம்இருக்கிற விடத்தில் கடமும் கடமிருக்கிற விடத்திற் படமும் இரா. அங்ஙனமே சிவப்பிரமம் இருக்கிறவிடத்தில் ஆன்மாக்களும் ஆன்மாக்கள் இருக்கிற விடத்தில் சிவப்பிரமமும் இல்லையென்றுசொல்ல நேரிடும். சிவப்ரமத்திற்கும் ஆன்மாக்களுக்கும் தனித்தனிப் பரிபூரணஞ் சொல்லும் சித்தாந்திகளுக்கு மிஃதுடன்பாடாமா? சிவப்பிரமத்துக்கு மேலாவது கீழாவது பக்கங்களிலாவது ஆன்மாக்கள் இருக்கின்றன வென்பதில இவ்வளவு ஒவ்வாமையிருப்பதால் சிவனுக்குள் ஆன்மாக்கள் பூரணமாயிருக்கின்றன. அதனது போலென்னின் குடத்துக்குள் நீர் இருப்பது போல் என்றாலோ குடமென்னும் சொல்லுக்குப் பொருள் மண்ணினாலான ஓடுதான்.

(இன்னும் வரும்.)

சாக்கைய பௌத்தர்கள்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (திரிக்குறள்,)

இப்பூண்டலம் புகழு மிந்து தேயத்தை ஆதியி லரசாண்டு வந்த வீரவாகு குலவாகு இட்சுவாகு சுவிவாகு வம்மிஸ வரிசை

போனுகிய சுத்தோதய மகாராஜாவின் கருவினுதித்தசித்தார்த்த மகாராஜா வானவர் உலகம் படுந்துயரை யறிந்து சுகவழியைக் கண்டுணர்வான்வேண்டி சகல வரசபோகங்களையுந் துறந்துக் கானகஞ்சிடை போதிபடியமர்ந்து சுகவழியைக் கண்டு புத்தராகி மெய்க்கில்லை யுலகத்தாருக்கு போதித்துவருங்கால் அசோகச்சக்கரவர்த்தி இச்சதறிய தர்மத்தை ஏற்று கல்லுகளிலும் மலைகளிலும் சாஸனமாக அடித்துவைத்ததுமன்றி தன்னரசுக் குட்பட்ட குடிகளையு மனுசரிக்க செய்து அனேக மடங்களையுங் கோவில்களையுங் கட்டி பௌத்த தர்மத்தை ஆசரித்து வந்தபடியே பின்னரசர்களு மாதரித்து வந்ததாய் சரித்திரங் காட்டுகிறது.

சப்பா பஸ்ஸ அகரணங்
குசலஸ வுபசம்பதா
சஜித்த பரியோதபனம்
எதம் புத்தானு ஸாஸனம்.

கொலைசெய்யாதிருங்கள், நன்மையைக்கடைபிடியுங்கள், இருதயத்தை சுத்தி செய்யுங்களென்ற புத்தாகமச் சுருகத்தை சிரம் பூண்ட பௌத்தர்கள் வாழ்ந்த காலத்தி லிந்திய நாட்டின் சிறப்பையுங் கல் விநாகரீகத்தையு மளவிட வேண்டின் அக்காலத்தி லெழுதியுள்ள பஞ்சகாவியங்களும் நீதிநூல்களும் வைத்திய நூல்களும் தத்துவ சாஸ்திரம் இலக்கண விலக்கிய நூல்களுமே போதுஞ்சான்றும். இத்தகைய வனந்த சாஸ்திரங்கள் தற்காலந் தோன்றியுள்ள வைதீக மதத்தினராகிய ஆரியரழித்துவிட்டது போக வெளிவந்திருக்கும் திரிக்குறள் நாலடியார் சூடாமணி நிகண்டு, திவாகரம் நன்னூல் அகத்தியம் யாப்பருங்கலம் யாப்பருங் கலகாரிகை நீதி வெண்பா வச்சணந்திமாலை ஆத்திச்சூடி கொன்றைவேந்தன் முதலிய பொது நூல்களைச்செய்து வைத்த வம்மிஸ வரிசையோராகிய பௌத்தர்கள் ஆரிய மதத்தை ஏற்றுக்கொள்ளாதபடியால் பறையரென்றும் நீச்சரென்றும் சண்டாளரென்றும் புலையரென்றும் நாளது வரையில் வஞ்சினமென்னுங் கயிற்றினல் கட்டி வதை செய்து வருகின்றனர்.

(இன்னும் வரும்.)

இரங்கோனில்

இராய்பாதூர் ஸ்ரீமந் மதுரைப்பிள்ளை யவர்களால்,

வாலாயமாய் நடாத்திவரும்

மஹா மகத்துவந் தங்கிய,

ஸ்ரீ மதுரைவீர சுவாமி மகாபூஜை.

நிகழும் 1909 வருஷம் மேய் மாதம் 30 தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணிவரைக்கும் தென்காஞ்சி ரெயில்வே ஸ்டேஷனுக் கடுத்த தேசக்காலனில் அமைத்துள்ள நமது ஸ்ரீமந் பிரபு அவர்களது "கணேஸ்பாக்" என்னுந் தோட்டத்தில் மேற்படி பூஜை மிகவிமரிசையாக நிறைவேறப் போவதாகவும் அதாவது 29 தேதி சனிக்கிழமை மாலை 4 மணிக்குள் பலிபூஜையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்குள் மஹா பூஜையும், பிறகு பூஜாலிகள் 6-கந்திகளின் மேல்கழுவேறுவதாகிய பக்திக்குரிய விஷயங்களும், அன்றுகாலை 8 மணியிலிருந்து 11 மணிவரையிலும் சைவ சாப்பாடு, பகல் 1 மணியிலிருந்து இரவு 8 மணிவரையிலும் பக்திபோஜன கந்தபுஷ்பதாம்பூல முதலிய உபசரிப்புவிஷயங்களும், இடைக்கிடையே இங்கிலீஷ் புல்பாண்ட், கன்செட்வாத்தியம், தங்கநாகசுரம், வெள்ளிநாகசுரம், மூன்றுஜதைகோவில்களின் மேளங்கள் டல்லாபாண்டு, தெலுங்கர் வாத்தியம், கிராமபோன், முதலிய வாத்திய கோஷ்டங்களும், இரவு 9 மணிமுதல் வைகறை பரியந்தம் ம-ள-ள-ஸ்ரீ பாகவதர் சித்தூர் சின்னசாமி முதலியாரவர்களால் வத்ஸலா கலியாண கதாப்ரசங்க காலக்ஷேபமும் நிறைவேறுமெனவும் அவ்வைபவத்தைமுன்னிட்டு இரங்கோன் ஸ்டேஷனிலிருந்து காலை 6 20 மணிக்கும் 7 30 மணிக்கும் பகல் 12 30 மணிக்கும் மாலை 4 30 மணிக்கும் 5 மணிக்கும் 6 30 மணிக்கும் இரவு 9 30 மணிக்கும் தென்காஞ்சி ஸ்டேஷனுக்கு ரெயில்கள் புறப்படுமென்றும் தென்காஞ்சி ஸ்டேஷனிலிருந்து காலை 6 மணி 8 30 மணி, ஒன்பது முப்பதுமணி, பத்து ஐம்பது மணி, பகல் ரெண்டு மணி, மாலை ஐந்துமணி, ஆறு மணி, ஏழு மணி இந்நேரங்களில் இரங்கோன் ஸ்டேஷனுக்கு ரெயில்கள் புறப்படுமென்றுந் தெரிவித்து நமது பிரபு அவர்களின் இருக்கைச்சாத்திட்ட அறிக்கைப் பத்திரமொன்று எமது பார்வைக்குவர வாசித்ததில் மஹா பூஜையின் சிறப்பும் பலிப்பூஜையின் ஆரவாரமும் வாத்தியக்கோஷ்ட கர்ணாமிர்தமும், பக்தியுபசரிப்பின் பரிபூரணானந்தமும், மற்றும் விஷயங்களும் யாம் கடந்த வருடம் நேரிற்கண்டு, கேட்டு சுகித்தவைகளானதினால் அவையாவும் எமது நினைவுக்குவர பேரானந்தம் உள்ளுளே பொங்கித்ததும்பிப் புளகாங்கிதங் கொண்டதோடு நமது பிரபு அவர்களின் நோயிலா வாழ்வும், குறைவிலாச் செல்வமும் பூண்டு

நீடு விளங்க ஷண்முக சிவனார் கிருபைபாலிப்பாரென பன்முறையும் வாழ்த்தாநின்றனம்.

நமது இராய்பாதூர் ஸ்ரீமந் பிரபு அவர்களின் அத்தியந்த பிரியதோழரும் அன்பிற்சிறந்த அருநெறியாளருநம இல்பே வழிவெளவெழுந்தசற்குணத்தருமாகிய ஸ்ரீமந் E L. சந்தசாமி முதலியா ரவர்கள் ஜனங்களுக்கு உபசரிக்கவேண்டிய விஷயமாய் இவ்வைபவத்தில் இம்முறை தாம் எடுத்துக்கொண்ட பிரயாசை மிகவுமதிகமெனக் கேட்க அன்னவர்க்கு மனப்பூர்வமான வந்தனஞ் சொல்லாநின்றனம்.

பத்திராதிபர்.

கடிதம்.

கத்தோலிக்குப் பாதிரிகள் போலல்லாதபுரோட்டஸ்டாண்டு பாதிரிகள் விவாகம் செய்துக்கொள்ளுகிறது உலகியல்பாம். அவ்வகையாக கோரமாண்டல் கேம்பில் ஓர் பாதிரியாரின் குமாரனுடைய கலியாணத்தில், நற்குணமும், கல்வியாளரைச்சன்மானிக்கும் குணமும், தக்கோர்களால் புகழப்பட்ட சன்மானதாரரும், பொதுநலப் பிரியரும் நல்ல குடும்பாதீனருமான சற்குணவரோதயரவண் வீற்றிருந்தனர். அன்னவரைக்கண்ட பொறாமையாளரிற்சிலர், தாங்களவ்வணம் சன்மானிக்கப்படாதது கண்டு, ஆந்தையானார்கள். சந்திரனைப் பார்த்து குலைத்த நாயானார்கள். புத்தியால் கூர்மமானார்கள். இல்லாததைக்கூறி இடுக்கண்ணிலகப்பட்ட ஈமக்காட்டாண்டியானார்கள் சூரியனைக்கண்ட பனியானார்கள். குண்டினி தனத்துக்குக்கு மண்டியிட்டார்கள் புறங்கூறி சரங்கு வித்துப் பொய்யர்களானார்கள் சிலர். இவர்கள் செப்பிய பொய்ச்சழக்க வார்த்தைகளைக்கேட்ட பெரியவர் இருபுறம் நகைத்தார்கள். என்பதுகேட்டு பெரிதும் துக்கிக்கின்றனம். கல்வி, ஞானம், முதலியன நாளுக்கு நாள் விருத்தியாகி ஜனஐக்கியமும் குலாபிமானமும் தழைத்துவரும் இக்காலத்திலும் பொறாமையுற்றுப் புறங்கூறும் புத்திகெட்டவர்களிருக்கிறார்களென்றால் நம்மவர்களுக்குள், நாகரீகமின்றி யிருந்தகாலங்களில் எத்தகைத்தான குணமுள்ளவர்களிருந்திருக்கக்கூடும் என்பது நல்லவரறிவார்கள்.

"அறங் கூறானல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது"

என்று மான்றோர் வார்த்தையைக்கவனித்தினியேனு நன்னடைக் கையுற்று பொறாமை குணத்தைப் போக்கடிப்பார்களாக.

நன்மைவிரும்பி.

சமாச்சாரக் கொத்து

வார்ச் செஸ்ட் ஷைர்மாகாணத்தைச் சார்ந்தரெட்டிட்ச்என்கிற கிராமத்திலுள்ள ஊசியந்திரச் சாலையில் வாரந்தோறும் (70 000, 000, 7-கோடி ஊசிகள் செய்யப்படுகின்றனவாம்.

பாரிஸ் பட்டணத்தில் சித்திரச் சாமான் வேலைசெய்யும் ஒரு தொழிலாளி இப்பொழுது ஒரு நாற்காலி செய்து முடித்திருக்கிறாராம், அதின் நான்கு கால்களும் பசும்பொன்னால் செய்யப்பட்டிருக்கிறதாம்.

உலகத்திலுள்ள மற்ற ஒவ்வொரு தேசங்களைப் பார்க்கிலும் அமெரிக்காவிலுள்ள ஐக்கியமாகாணத்தில் நெருப்புக்குச்சிகள் அதிகமாக உபயோகப்படுத்தப் படுகிறதாம். இங்கிலாந்து தேசத்திலுள்ள ஜனங்களில் ஒவ்வொருவரும் ஒருநாளைக்கு சராசரி 8 நெருப்புக்குச்சிகள் உபயோகப்படுத்துகிறார்களாம்.

வின்வுட் என்கிற நகரத்தில் ஒரு கறுப்பறவை காணப்பட்டதாம். அதற்கு இரண்டு தலைகளும இரண்டுவாய்களும் உண்டாம். அது தன் இரண்டுவாய்களாலும் ஏககாலத்தில்புழுக்களை கொத்தி சேர்க்கிறதாம்.

உலகத்தில் அதிகவிலையுள்ள கோபுரம் மகமதுவின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டிருக்கிறதாம். அதின் ஜோடிப்புக்காக உபயோகிக்கப்படும் ரத்தினக்கற்கள்வைரக்கற்கள் முதலானவை 3 கோடி ரூபாய் மதிப்புள்ளதாம்.

ஒருஞானியும் ஒரு குடியானவனும்

ஒரு ஞானி ஒருகாலத்தில் ஒரு குடியானவனிடத்தில் வேலைக்காரனாக நியமிக்கப்பட்டான். ஒரு நாள் தன்னுடையவயலில் கோதுமையை விதைக்கும்படி குடியானவன் அவனுக்கு உத்தரவு கொடுத்தான். அப்பொழுது ஞானி கோதுமைக்குப் பதிலாக பார்லி என்கிற தானியத்தை விதைத்து விட்டான். தானியம் முதிர்ந்த பிறகு குடியானவன் ஞானியைப்பார்த்து உன்னைகன்ர

கோதுமை விதைக்கச் சொல்லவில்லையா? அப்படியிருக்க பார்லியை விதைத்தது யார் என்று கேட்டான். அதற்கு ஞானி ஒரு வேளை இதிலிருந்து கோதுமை விளையும் என்று மறுமொழிபகர்ந்தான் அதற்கு எஜமான் என்ன புத்தி யீனமாய் நீ பேசுகிறாய் என்றான். அப்பொழுது ஞானி தீமையை விதைத்தமனிதர்கள் நன்மையை அறுக்க எதிர்ப்பார்க்கிறார்கள் அதுபோலவே பார்லியிலிருந்து கோதுமை விளையும் என்று நான் நினைத்தேன் என்றான்.

அமெரிக்காவின் யானை அதின் தந்தத்தினால் வர்ஜிதப்படுகிறது. ஒரு யானையின் விலை 700ரூபாயிலிருந்து 900ரூபாய் மட்டும்விற்பனை செய்யக்கூடுமாம் ஆனால் இந்தியாவில் வேலை செய்யக்கூடிய யானையோ 7500ரூபாயிலிருந்து 10500ரூபாய் மட்டும் வாங்கப்படுமாம்.

தற்போது பிரிட்டிஷ் மியூஜியத்தில் 25மைல் அளவில்பரப்பிவைக்கக்கூடியபுஸ்தகங்கள் உண்டு, இப்படியாக வருஷத்திற்கு 50000 புஸ்தகங்கள் சேர்க்கப்படுகிறதாம்.

சடுதி மரணம்:—ஜுன்மாதம் 29தேதி காலைநாராயணசாமியென்னும் ஓர் இந்து வாலிபன் தென்னிந்தியா ரயில்வேயில் டிக்கட் கலெக்டர் வேலை சம்பாதிக்கும்படி எழும்பூர் கமிஷனர் போலீசு ரோடுவழியாய் தன் வாயில்சிகரெட்டுவைத்துக்கொண்டு வரும்போது திடீரென்று விழுந்து இறந்து போனான். இன்ஸ்பெக்டர் ஹாட்னென்ட் என்பவர் எழும்பூர் மரண பரிசோதனை செய்யுமிடத்தில் கொண்டுபோய் சோதித்துப் பார்க்கும்போது ஜூரியர்கள் இரத்தாசன கெடுதியினாலிறந்தானென தீர்மானிக்கப்பட்டது.

கும்பாபிஷேகம்:— சென்னைத் திருமயிலை மேட்டுவீதியின்கண் ஸ்ரீமந்.'வீ, மா. வேலு பிள்ளையவர்களால் பெரும்பிரயாசையாகவும் சில அன்பர்களுதவியாலும் ஆகமவிதிப்படி கட்டிமுடித்த ஸ்ரீ ஜீவரத்தின விநாயகர் சந்நிதான கும்பாபிஷேகம் 1909ஹு ஜுன் மீ 13உ ஆதிவாரம் நிறைவேறியது. அன்று காலை ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு அஷ்டபந்தன ஸ்தாபனமும் தூபதீபநைவேத்திய அபிடேகமும் அடியார்களுக்கு மகேஸ்வர பூஜை முதலியனவும் நிறைவேறின. அன்றிரவு பிரம்பை பிரசன்னவிநாயகர் ஆலயஸ்தாபகரும் எமது மாணவருமாகிய பிரம்பை ஸ்ரீ மா. ஷண்முகம்பிள்ளையவர்களால் சைவ புராண சத்கா லக்ஷேபமும் நிறைவேறியது.